ஜனப்பிரதிநிதி சபை:

சென்னை மாகாண செல்வநிலை

வரவு செலவு திட்ட விவாதம்

காங்கிரஸ் சர்க்காரிடம் நம்பிக்கை

ஜஸ்டிஸ்கட்சித் தலைவரின் பாராட்டு

கண்டனங்களுக்குப் பிரதம மந்திரியின் பதில்

சென்னை ஜனப்பிரதிநிதி சபையில் 4-ந் தேதி யன்று வரவு செலவுத்திட்டத்தைப் பற்றி நடந்த விவாதத்தின் ஒரு பகுதியை அன்று பிரசுரித்தோம். மற்றொரு பகுதியைக் கீழே பிரசுரிக்கிறோம்.

ஜனுப் அப்துர் ரஹிமான்கான்

பேசியதாவது:—

மதுவிலக்கு வெற்றி பெறுமா, பெறாதா என்பதை இதற்குள் சொல்லிவிடுவதற்கில்லை. இந்தத் திட்டத்தை வேலை செய்வதில் உத்தியோகஸ்தர்களுக்கும், உத்தியோகஸ்தரல்லாதாருக்கும் பிணைந்த ஒத்துழைப்பு இருக்க வேண்டும். சம்பள வெட்டிருக்க வேண்டியது அவசியமே. முஸ்லீம்களின் கல்வியபிவிருத்தி விஷயத்தில் மந்திரிசபை தக்க கவனம் செலுத்துமெனநான்நம்புகிறேன். மலையாளப் பிராந்தியத்திலும் மதுவிலக்கு ஏற்படுத்தப்படாததற்காக நான் வருந்துகிறேன்.

ஸ்ரீமதி லட்சுமி சங்கரய்யர்

பேசியதாவது:—

கனம் பிரதம மந்திரியின் திட்டத்தைப் படித்தும், நாட்டுப்புற கிராமமக்கள் உண்மையில் சந்தோஷப்படுபவரென்பதில் சந்தேகமேயில்லை. கிராம மக்களின் கஷ்டங்களை நேரில் பார்த்து அறிந்துதான அவர் அவற்றை மனதில் கொண்டு அவர்களுக்கேற்ற திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். குடி தண்ணீர் சப்ளை, சுகாதாரம் இவற்றிற்காக இப்பொழுது அதிகமான தொகை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. கிராம மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்காகத்தான் நாம் இச்சபையிலிருக்கிறோமென்பதை நன்கு உணர்ந்தே அவர் இத்திட்டத்தை தயாரித்திருக்கிறார். சாத்தியமான வரையில் அவர்களுக்கு நிவர்த்தியளிக்கப்பட்டிருக்கிறது. கதர் திட்டத்திற்கு ஆதரவு காட்டியிருப்பது முற்றிலும் சரியே. இதைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் கண்டித்தார்கள். பாமர மக்களின் வயிறறுக்குக் கஞ்சிவார்க்கக்கூடிய இயக்கம் வேறுஎன்ன இருக்கிறது. கோஷா சோப்புத்தொழிற்சாலையபிவிருத்திக்குப் பணம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மண்பாண்டத்தொழில் உலோகத்தொழில் இவற்றின் அபிவிருத்திக்கும் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இவ்வாறுகச் சிறு சிறுதொழில்களுக்கும் சிறிது சிறிது உயிரை ஊட்டியிருக்கிறார் நம்முது பிரதம மந்திரி.

மார்ஷ்பாங்ஸ் கமிட்டி சிபார்சுகள் எல்லா ஜில்லாக்களுக்கும்திருப்தியளிக்கவில்லை. திருநெல்வேலி ஜில்லாவாசிகள் இந்த மாகாணத்திலேயே வேறு எந்த ஜில்லாவும் கொடுத்துவராத அவ்வளவு அதிக வரியைக் கொடுத்து வருகிறார்கள். நகர் செலவுக்கேற்றபடி மார்ஷ்பாங்ஸ் திட்டத்தில் தீர்வை வகுக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் காங்கிரஸ் மந்திரிகள் நன்கு கவனித்து, பாரபட்சமன்னியில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் வரி வஜா கிடைக்குமாறு செய்வரென தெரிவிக்கிறேன். பாபஞ்சத்தில் சரியான நீர்ப்பாசனவசதிகள் இல்லை என்பதையும் அவர்கள் கவனிக்க வேண்டும். ஆங்காங்கு தாம்பிரபரணிநதியில் சரியான நீர்த்தேக்கங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். சில சமயங்களில் அதிக வெள்ளம்வந்து விடுகிறது, சில சமயங்களில் மணல் தங்கிவிடுகிறது. ஜலத் தேக்கங்களிருந்தால் இக்கஷ்டங்கள் நீங்கும். அடுத்த வருஷத்திலாவது இவ்வேற்பாடுகள் கிடைக்குமென நம்புகிறேன்.

ஜனுப் மஹபூப் அலிபேக்

பேசியதாவது:—

புதிய பிரதம மந்திரி வரவு செலவுத் திட்டத் தயாரிப்பில் புதிய வழியில் இறக்கியிருக்கிறார். ஏழைக் கிராம வாசியை நெஞ்சத்தில் வைத்துக்கொண்டு அவர் இந்தத்திட்டத்தைத் தயாரித்திருப்பது தெளிவாக விருக்கிறது. குடியானவனின் வாழ்வு உயரவேண்டுமென்பது அவர் நோக்கமாக விருக்கிறது. பற்றற்ற தேசாபிமானத்திலிருந்து தான் இத்தகைய திட்டங்கள்பிறக்கும். எதிர்காலத்தில் நாம் பின்பற்றுவதற்கான சில தத்துவங்களையும் அவர் தமது திட்டத்தில் அமைத்திருப்பது அற்புதமாக விருக்கிறது.

ஆனால்கிராமத்திலுள்ள ஏழைமக்களின் நிலையை உயர்த்துவதற்காகச் சிலவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வகைகள் சரியானவையல்ல என்று பலர் சொன்னார்கள். ஆனால் அவர்களில் ஒருவாகூட வேறுவகையான நிவர்த்தி எதையும் குறிப்பிடவில்லை. கொள்கையைக் கண்டிப்பதுடன் அவர்கள் நின்று விட்டார்கள். இதை நான் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

நிலவரி மிகவும் கொடுமையானதாகவே இருக்கிறது. குடியானவன் தனது வருமானத்தில் பாதியை வரியாகச் செலுத்திவிடுகிறான். இந்த நிலைமையை நாம் நீடிக்கவிருக்கச் செய்வதா? அவர்களது வரியைக் குறைத்து பணக்காரர்களுக்கு வரிபோடவேண்டியதுதான் நியாயம். விவசாயிகள் இனியும் வரிச்சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கமுடியாது.

மௌலானா யாகூப் ஹஸன்

பேசியதாவது:—

தென்னிந்திய வர்த்தகச் சங்கப் பிரதிநிதியின் பிரசங்கம் மிகவும் ஏமாற்றத்தைத் தருவதாக விருக்கிறது. வியாபார வகுப்பினர் காங்கிரஸ் கவர்ன்மெண்டாருடன் தகுந்த வழியில் ஒத்துழைக்கவேண்டியதே நியாயமானது என்பதை நான் குறிப்பிடுகிறேன். நூல் நூற்றலுக்கு ஆதரவளிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதால் ஆலைத்தொழிலே அழிந்துவிடுமென ஒருவர் கூறினார். இவ்விஷயங்களை அவரும், அவர் போன்றவர்களும் நன்கு கவனிக்கவில்லையென்றே நான் சொல்லுகிறேன். வருஷத்திற்கு 2 ரூபாய் வரியே அன்னியத் துணி வியாபாரக் கடைகளுக்கு விதிக்கப்பட உத்தேசித்திருக்கிறது. இதனால் எப்படி ஆலைத்தொழில் பூராவுமே அழிந்துவிடுமென நான கேட்கிறேன்.

ஒருவரைத் தவிர மற்றெல்லா முஸ்லிமான் அங்கத்தினர்களும் மதுவிலக்கை பூரணமாக ஆதரிக்கவில்லை வருமானம் குறைந்து விடுமே என்பதற்காகப் பலர் ஆட்சேபிக்கிறார்கள். ஆனால் ஜனுப் கலிபுல்லாசாகிப் இக்காரணத்திற்காக அல்லாமல் வேறு சில காரணங்களைக் கொண்டுமதுவிலக்கை ஆதரிக்கமறுக்கிறார். விஷயங்களை நன்கு கவனித்தால் இந்த ஆட்சேபணைகளுக்கே இடமில்லை யென்பது நன்கு தெரியவரும். முஸ்லீம் அங்கத்தினர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுமுன் விஷயத்தை ஆராயவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன்.

செட்டிநாடு குமாரராஜா

பேசியதாவது:—

மாகாணத்தின் செல்வ அதிகாரம் இப்பொழுது கவர்னரது வசமில்லை. அது இப்பொழுது ஜனங்களின்நம்பிக்கைக்குப்பாத்திரமான ஒரு கட்சியின் வசமிருக்கிறது. பிரதம மந்திரி அவர்கள் தமது கொள்கைகளையும் திட்டங்களையும் எவ்வாறு நிறைவேற்றி வைக்கப் போகிறார் என்பதை பொறுத்துப் பார்க்கவேண்டும். இதற்கு முன்னிருந்த அரசியலில் மந்திரிசபையின் அதிகாரங்கள் வெகுதூரம் ஒடுக்கப்பட்டிருந்தன. எனவே அந்த நிலையில் முன்னிருந்த மந்திரி சபைகள் சென்ற 17 வருஷகாலமாகச்செய்துள்ள காரியங்கள் எவ்வளவோ சிறந்தவையாகும். கடன் தொகை விரைவில் சேர்ந்திருப்பது புதிய கவர்ன்மெண்டு மீது பொதுமக்கள் வைத்துள்ள அபார நம்பிக்கையையே காட்டுகிறது. இம்மாகாணத்தின் செல்வத்தெனப் பாதுகாக்கும் விஷயத்தில் எனது கட்சியினரின் ஆதரவு பிரதமமந்திரிக்குப் பூரணமாகக்கிடைக்குமென்பதாகஉறுதி கூறுகிறேன்.

இந்தியாவில் குடித்தல் பாபமாகத்தான் கருதப்படுகிறது. குடிப்பது பெருத்த தீங்குகளை விளைவிக்கிறது. அதிகச் செலவானாலும் கூட மதுவிலக்குத் திட்டத்தைப் பரீட்சை பார்ப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் காரியம் சுலபமானதல்ல. இதில் வெற்றியைவிடத் தோல்வியே நிச்சயமாக முன்நிற்கிறது கலால் இலாகா மூலம் கிடைக்கும் வருமானத்தால் பல இலாகாக்களின் வேலைகள்நடந்துவருகின்றன. இப்பொழுது இந்த வருமானம் வீழ்ந்துவிட்டால் அந்த இலாகாக்களில் வேலை எவ்வாறு நடப்பது என்பது தான் எனது கேள்வி.

பார்வைக்குச் சரிக்கட்டிவிட வரவு செலவுத் திட்டம்போல் காணப்படினும் உண்மையில் இது அவ்வாறானதல்ல. வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிப்பது பற்றித் திட்டத்தில்பிரஸ்தாபமே காணோம். நூல் நூற்றல் தொழிலுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள 2 லட்சம் ரூபாயில் சரியான பிரதிப்பிரயோஜனம்கிடைக்கப்போவதில்லை என்பதை நான் குறிப்பிடுகிறேன். வியாபார வகுப்பினரின் பிரதிநிதியாகிய ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் சொன்ன விஷயங்கள் முழுவதும்சரிதான் அவரதுகொள்கைகளின் கருத்தை அவர் சரியாக எடுத்துக்காட்டினார். மார்ஷ் பாங்ஸ் கமிட்டியின் சிபார்சுகள்நேர்மையானவை ஆதலால கவர்ன்மெண்டார் அவற்றை ஏற்றுக் கொள்வரென நம்புகிறேன் கிராம மக்களின் கடன் சுமையைத் தீர்க்க வழி தேடப்பட வேண்டும். குடிதண்ணீர் சப்ளை கிராம வைத்தியசாலைகள் முதலிய அபிவிருத்திகளை யெல்லாம் சாதாரண வருமானங்களைக்கொண்டு உடனே செய்ய முடியாதென்பது எனது கருத்து.

சம்பளவெட்டு விஷயம் சம்பந்தப்பட்டமட்டில் இந்தியாவில் அரசாங்கம் தலை கனத்திருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால். இதற்காக ஒரே அடியில், முதலாவதாக உத்தியோகஸ்தர்களின சம்பளங்களைக் குறைப்பது கூடாது திவான்பகதூர் ஆர்பாதுரைப் பிள்ளை அவர்கள் கூறியதுபோல் அனாவசியமான இலாகாக்களை யெல்லாம் ஒழித்துவிட உடனே முனைய வேண்டியதுதான நியாயம். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரும் அவரது சகாக்களும் இம்மாகாணத்தின் செல்வத்தெனைக் குலைக்காமல் நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார்

பேசியதாவது:—

வரவு செலவுத் திட்டத்தைச் சபையினர் வரவேற்றுள்ள வகையைக் கண்டு நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். அதைக் கண்டித்தவர்கள் கூட பலவிதமான யோசனைகளைக் கூறி ஆறுதலளித்தனர். அநேகமாக எல்லாக் கட்சியினரையும் வரவுசெலவுத் திட்டம் திருப்திப்படுத்தி யிருக்கிறதென்பது எனது துணிவு. மிஸ்டர் பவர் எனக்கு அகில இந்திய காங்கிரஸ்சபையினர் இன்னும் அதிக சுதந்திரம் அளித்திருந்தால் நல்லதெனச் சொன்னார். இது பூராவும் தவறு; அந்தமாதிரியான நிர்ப்பந்தம் எதுவும் எனக்கு ஏற்படுத்தப்படவில்லை. தேசமக்களின் துர்ப்பாக்கிய நிலைமையை அறியவும், வறுமையைப் போக்கவும், கஷ்டங்களை நீக்கவும் பிறர் நிர்ப்பந்தப்படுத்தப்பட வேண்டியில்லை. பல வருஷங்களாக என் மனதில் தோன்றிக்கொண்டிருந்த திட்டங்களை வகுக்கவே நான் முற்பட்டிருக்கிறேன். எனவே மிஸ்டர்பவர் அந்தமாதிரியான கருத்தை வெளியிட்டேயிருக்கக்கூடாது.

ஜனுப் பஷீர் ஆக்ஷபித்தவர்கள் மெண்டாரோடன்னாங்கினதுதவறு எனக்கூறினர் ஆனால் உண்மையில் இதை ஆதரிக்கவில்லை இந்தவாரம் வியாபாரிகளும், இதா வகுப்பினரும் கடனைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள் என்பதைக் கவனித்தால் இந்தத் தவறு நன்கு விளங்கும். செல்வநிலை மிகவும்திடமாக விருப்பதை இது காட்டுகிறது.

நூல்நூற்கும் தொழிலுக்கு ஆதரவு காட்டியிருப்பதைப் பலர் கண்டித்தனர். ஒருவரைக் கொள்ளையடித்து இன்னொருவருக்குக் கொடுப்பதா எனச் சிலர் கேட்டார்கள். அரசுமுறையே ஒருவரைக் கொள்ளையடித்து இன்னொருவருக்குக் கொடுப்பதுதான். (பலத்தநகைப்பு) ஆலைத்தொழில் அழிந்துவிடுமெனச் சொல்லப்பட்டது ராட்டினமும், கைத்தறியும் ஆலைகளுடன் மும்முரமாகப் போராடி வருகின்றன. இந்தப் போராட்டத்தில் ஆலைகள் அழிந்துவிடுமானல் அதற்காக யாரும் வருத்தப்பட மாட்டார்கள். ராட்டையையும் கைத்தறியையும் காப்பாற்ற வேண்டியதுதான் நமது கடமை. ஐரோப்பிய அங்கத்தினர்கள் இத்தேச விஷயங்களில் இன்னும் அதிக இரக்க சுபாவத்தைக் கொள்ள வேண்டும். அவர்கள் சேவாளர்கள் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் கண்டு மனமாற்றத்துடன் திரும்பி வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இந்தக் கவர்ன்மெண்டின் ஒரு அம்சமாகவிருக்கும் வரையிலும் ஒவ்வொரு ரூபாயையும் ராட்டைகளைச் சுழற்றிப் பிழைக்கும் ஏழை ஸ்திரீகளுக்குத் தான் கொடுத்துக் கொடுப்பேன்.

ராட்டைக்கும் கைத்தறிக்கும் போட்டியிருப்பதாக ஜனுப் பஷீர் சொன்னார். விஷயங்களை அறியாததன்மையில் இவ்வாறு அவர் சொல்லியிருக்கிறார். கதர் பிரசாரத்திற்காகக் கவர்ன்மெண்டு பணம் உபயோகிக்கப்படுவது நியாயமா என ஒருவர் கேட்டார் என்னுடைய மூக்கில் மூச்சு உள்ள வரையிலும் காந்திஜியின் தொண்டையில் வலுவுள்ளவரையிலும் கவர்ன்மெண்டு பணத்தில் ஒரு சல்லிக்காசுகூட கதர் பிரசாரத்திற்கு வேண்டியதில்லை.

மோட்டார் கார்கள் வாங்கினதைப்பற்றிச் சிலர் குறைகூறினர். இதில் எவ்விதத்தவறுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கார்கள் எங்களுக்குப் பிறகு கூட கவர்ன்மெண்டி னுடையதாகவே யிருக்கும். பொது ஜனங்களின் சம்மதத்தைப் பெற்று அவர்களும் அவற்றை உபயோகித்துக்கொள்ளலாம் (சிரிப்பு).

சம்பள வெட்டும் கண்டிக்கப்பட்டது; ஆனால் இதைச் செய்துதான் தீரவேண்டும்; சம்பளங்களைக் குறைத்தால் அந்தப் பணம் வேறு நல்ல வழிகளுக்குத்தான் செலவழிக்கப்படும் நிலாகச் செலவைக் குறைப்பதால், நமக்குத்தான் உதவி செய்து கொள்ளுகிறோம். உத்தியோகஸ்தர்கள் எனது அபிப்பிராயத்தை ஆதரிப்பரென நம்புகிறேன். அவர்களுக்கு வேண்டிய அளவிற்குத் தேசாபிமானமிருக்கிறது. அவர்கள் என்னுடன் ஒத்துழைப்பரென நான் பூரணமாக நம்புகிறேன்.

ஷெட்யூல்ட் வகுப்பினரின் கல்விக்காக இந்தத் தடவை முன்னைவிட அதிகப்பணம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. புள்ளி விவரங்களை ஊன்றிக்கவனித்தால் இது தெரியவரும். விவசாய மக்களுக்கு நிவர்த்தியளிக்கவும், வேண்டிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மார்ஷ் பாங்ஸ் கமிட்டியின் சிபார்சுகள் கவனிக்கப்படும். நூல்நூற்றலுக்கு அளிக்கப்படும் ஆதரவு எனக்கு அளிக்கப்படும் ஆதரவாகக் கருதப்பட்டாலும்கூட மற்ற கைத்தொழில்களின் அபிவிருத்திக்கும் வகை காணப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் மதுவிலக்கை முன்னமேயே அனுஷ்டித்திருக்க வேண்டுமெனக் கூறினார். ஆதலால் தான் மேலும்தாமதம் செய்யக்கூடாது என்று நாங்கள் சொல்லுகிறோம். "இந்தக் கள்ளுக்கடைகளை ஒழித்து எங்களைக் காப்பாற்றக்கூடாதா?" என்று என்னைக் கிராமவாசிகள் கேட்டிருக்கிறார்கள். அவர்களது மத்தியில் வசித்திருக்கிறேன். இப்பொழுது இந்தப் பதவியிலிருக்கையில் நான் அவர்களதுவேண்டுகோளை எங்ஙனம் நிறைவேற்றாமலிருக்கமுடியும்? குடிப்பது பாபம் என்ற முடிவிற்கு வந்த பிறது பணமில்லையே என்பதற்காக ஜனங்களைக் குடித்துக் கெட்டுப்போகும்படி நாம் விட்டுவிடுவதா? இந்தியாவில் ஜனங்களின் சுதந்தரத்தில் தலையிடுவதாக யாரும் சொல்லமாட்டார்கள். சிலர் நாம் வெற்றிபெறுவோமா எனச் சந்தேகப்பட்டார்கள். அவர்கள் சந்தேகமேபடக்கூடாது; சந்தேகத்தைக் கொஞ்ச காலத்திற்காவது ஒத்தி வைத்துக்கொண்டு அவர்கள் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். எனக்கூறி முடித்தார் அதன் பின் சபை 14-ந் தேதி வரை சபை ஒத்தி வைக்கப்பட்டது.

சென்னை பிரதிநிதி சபை

கேள்வி பதில்கள்

சென்னை. செப் 4—

இன்றைய பிரதிநிதி சபைக் கூட்டத்தில் கேட்கப்பட்ட முக்கியமான கேள்விகளும், அவற்றிற்கு அளிக்கப்பட்ட பதில்களும் பின் வருமாறு:—

வாடகைக்கு ஓடும் லாரிகள்

சொந்தக் காரியங்களுக்காக ஓட்டப்படும் லாரிகள் விஷயத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள் விதிக்கும் பல விதமான நிர்ப்பந்தங்களைக் குறித்து திவான் ஸ்ரீமான் ராமஸ்வாமி முதலியார் பல கேள்விகள் கேட்டதற்கு ஸ்தலநிர்வாக மந்திரி, லாரிகளின் தொகையைக் கட்டுப்படுத்தும்படி ஜில்லா போர்டு தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதென்றும், இதை நீக்க கவர்ன்மெண்டார் எதுவும் செய்ய உத்தேசிக்கவில்லையென்றும் பதிலளித்தார்.

சர்க்கார்களில் ஓடும் இதர வாகனங்களும் இதேமாதிரி கட்டுப்படுத்துகின்றனவா என மிஸ்டர் ஸ்மித் கேட்டதற்கு கனம் மந்திரி தமக்குத்தகவலில்லைஎனப் பதில்கூறினர்.

ஸ்ரீமான் ராமசாமி முதலியார்:—ஜில்லா போர்டு தலைவர்கள் லைசென்சுகளை மறுப்பது சம்பந்தமான உத்தரவை ஆட்சேபித்து யாராவது மனுச்செய்து கொண்டிருக்கிறார்களா?

பதில்:—எனக்குத் தெரிந்த வரையில் இல்லை.

ஸ்ரீமதி லட்சுமிபதி:—வியாபார லாரிகளுக்கும், சொந்த லாரிகளுக்கும் வித்தியாசம் காட்டப்படுவானேன்?

பதில்:—இதைப்பற்றித்தான் நாங்கள் யோசித்துவருகிறோம்.

ஸ்ரீமான் நடேச செட்டியார்:—இரவு நேரங்களில் லாரிகள் ஓடுவதைத் தடுக்கும் விஷயத்தைப் பற்றிக் கவர்ன்மெண்டார் யோசிப்பார்களா?

பதில்:—இந்த யோசனை கவனிக்கப்படும்.

ஸ்ரீமான் ராமகிருஷ்ண ரெட்டி:—விபத்துக்கள் ஏற்படாமலிருக்க லாரிகள் இராத்திரி வேளைகள் ஓடுவதே நல்லதல்லவா?

மந்திரி:—இது அபிப்பிராயத்தைப் பொருத்தது.

மோட்டார் பஸ்ஸுகளின் வேகம்

மோட்டார் பஸ்ஸுகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், அனுமதிக்கப்பட்டிருப்பதற்கு மேல் அதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்வதைத் தடுக்கவும் என்ன நடைமுறைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவென்பது குறித்து ஸ்ரீமான் கே. எ. நாச்சியப்பகவுண்டர் பல கேள்விகள் கேட்டார்.

சிறை, கோர்ட்டு இலாகா மந்திரி இவற்றிற்குப் பதிலளிக்கையில், சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் "ஜி" பர்மிட்டுகளில் விசையின் அளவும், பிரயாணிகளின் தொகையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவென்றும், இதன்படி நடக்காதவர்களை மோட்டார் வாகனச் சட்டப்பிரகாரம் பிராசிகியூட் செய்ய போலீஸ் டெபுடி சூப்பிரண்டுகளுக்கு அதிகாரமிருக்கிறதென்றும், பஸ்ஸுகள் விதிகளை மீறி நடப்பதாகக் கருதினல் போலீஸ் இன்ஸ்பெக்டர்களோ அல்லது மாஜிஸ்திரேட்டுகளோ எந்தச் சமயத்திலும், எந்த இடத்திலும் அவற்றை நிறுத்திவிடலாமென்றும், அதிக வேகமாக ஓட்டுதல் அதிக பிரயாணிகளை ஏற்றிக் கொள்ளுதல் இவற்றைத் தடுக்கும்படி போலீசாருக்கு கவர்ன்மெண்டார் மிகக் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பித்திருப்பதாகவும் கூறினர்.

விசையையும், ஓவர்லோடையும் தடுக்க இன்ஸ்பெக்டர்களின் வசம் அவசியமானசாதனம் எதாவது இருக்கின்றதா என மிஸ்டர் ஸ்மித் கேட்டார்.

இப்பொழுது எதுவுமில்லையென்றும், ஆனல சாதனமொன்றிற்கு ஏற்பாடு செய்வதுபற்றி கவர்ன்மெண்டார் யோசித்து வருவதாகவும் மந்திரி பதில் சொன்னர்.

விபத்துகள் அதிகமாகி வருவதற்குக் காரணமென்னவென்று ஜனுப் பஷீர் அஹமத் கேட்டார்.

பஸ்ஸுகளின் தொகை பெருகுவதே காரணமென மந்திரி விடையளித்தார்.

ஜனுப் பஷீர்:—திறமையற்ற டிரைவர்கள் காரணமாக விருக்கக் கூடாதா?

பதில்:—இருக்கலாம்.

கேள்வி:—போக்கு வரத்தைச் சரிவர ஒழுங்குபடுத்தாததும் காரணமல்லவா?

பதில்:—இப்பொழுதுள்ள சிப்பந்திகளை வைத்துக்கொண்டு வெளியிடத்துரஸ்தாக்களில்அதிகமாக ஒழுங்குபடுத்த முடியாது.

ஸ்ரீமான் வி. எம். ராமஸ்வாமி முதலியார்:—பிரஜைகளிடையேயும், பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் குழந்தைகளிடையேயும் ரஸ்தாக்களில் செல்லுகையில் ஜாக்கிரதையாகப் போக வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படுமாறு செய்ய கவர்ன்மெண்டார்எதாவதுசெய்து வருகிறார்களா?

பதில்:—எல்லோருக்கும் இவ் உணர்ச்சி ஏற்படுமாறு கவர்ன்மெண்டார் செய்துதான் வருகிறார்கள்.

ஸ்ரீமான் நடேச செட்டியார்:—ஆறுவருஷ டிரைவிங் அனுபவமுள்ளவர்களுக்கு மட்டுமே லைசென்ஸ்கொடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றிக் கவர்ன்மெண்டார் யோசிப்பார்களா?

பதில்:—யோசனை கவனிக்கப்படும்.

தென்னாற்காடு ஜில்லாபோர்டு டெண்டர்கள்

தென்னாற்காடு ஜில்லா போர்டுக்கு ஸ்டேஷனரி சாமான்கள் சப்ளை செய்வது சம்பந்தமான சில டெண்டர்களை போர்டு தலைவர் ஒழுங்கற்றமுறையில் ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுவது பற்றி ஸ்ரீமான் ஆர். வெங்கடசுப்பாரெட்டியார் ஒரு கேள்வி கேட்டார்.

பதில்:—இவ் விஷயம் கவர்ன்மெண்டு ஆலோசனையிலிருக்கிறது

ஸ்ரீமான ரெட்டியார்:—ஆடிட்டரின் யாதாஸ்து சபையில்சமர்ப்பிக்கப்படுமா?

பதில்:—இது சாத்தியமல்ல

ஜனுப் பஷீர்:— நஷ்டம் எதாவது ஏற்பட்டிருக்கிறதா?

பதில்:—நஷ்டமோ, லாபமோ பூராவிஷயமும் கவர்ன்மெண்டு யோசனையிலிருந்து வருகிறது.

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்)

பசு வதை

பண்டித நேருவின் கடிதம்

(அ—பி.)

காசி. செப் 4—

காசியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பசுவதை செய்யக்கூடாதென்று ஒரு காங்கிரஸ்காரர் நகர சபையில் ஒரு தீர்மானம்கொண்டு வருவதுபற்றி, முஸ்லீம் காங்கிரஸ்காரர்கள் பண்டித நேருவுக்குத் தந்தியடித்தனர். அதற்காக காசி காங்கிரஸ் கமிட்டிக்கு பண்டித நேரு பின்வருமாறு எழுதியிருக்கிறார். அதாவது:—

"பசுவதை போன்ற மாமூல் விஷயங்கள் வகுப்புவாத சம்பந்தமாகக் கருதப்படக்கூடாது. அது முஸ்லீம்களது ஒத்துழைப்புடன் நடக்கவேண்டும். ஒரு பக்கத்தையே ஆதரிக்கும் தீர்மானத்தினால் வகுப்புச் சண்டைதான் அதிகரிக்கும்."

பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யப்படும்
விளம்பரப்படி இல்லாவிட்டால விலை வாபஸ் கொடுக்கப்படும்.

மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சரியப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம், நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமை



யுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத் தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமல் போன சாமான்களைக் கண்டு பிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல். மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்துகொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்தினல், ஒரே விநாடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணா 8

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY

மதுரை வசந்த தெப்பத் தகராறு

மந்திரிகளிடம் தூது

சென்னை. செப் 6—

மதுரை முனிஸிபல் கவுன்ஸில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, மதுரை முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமான் என். எம். ஆர். சுப்பாராமன், முனிஸிபல் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீமான் ஆர். ராமநாதய்யர், கவுன்ஸிலர்களான ஸ்ரீமான்கள் எல். கிருஷ்ணஸ்வாமி பாரதி, நல்லமுத்துப் பிள்ளை, பி. சுந்தரம்பிள்ளை, ரத்னசபாபதி செட்டியார், பழனிக்குமார முதலியார், பாண்டிய நாடார், முதலானோர் பிரதம மந்திரி, ஹிந்து மத ஸ்தாபன மந்திரி, ஸ்தல ஸ்தாபன மந்திரி முதலிய மூன்று மந்திரிகளையும் பேட்டி கண்டு முனிஸிபல் நிர்வாக உத்தியோகஸ்தர் வசந்த தெப்பத்தை இடித்தது சம்பந்தமாகவும் அதன் விளைவாக மதுரைமுதலிய தேவஸ்தானங்கள் மதுரை ஜில்லா முன்சிப் கோர்ட்டில் பிராது தாக்கல் செய்திருப்பது சம்பந்தமாகவும் விவரமாக எடுத்துக் கூறினர்.

மேற்படி தகராறு சம்பந்தமான முக்கிய விஷயமென்னவெனில் இடிக்கப்பட்ட கட்டிடத்தின்மனை கிழக்காவணிமூலவீதி பொதுரஸ்தாவின் ஒரு பாகமா, அல்லது பொதுரஸ்தாவாக உபயோகப்படுத்துவதற்கு முனிஸிபாலிடிக்கு எவ்வித உரிமையுமில்லாததேவஸ்தானத்தின் சொத்தா என்பதுதான்.

தூதுவகோஷ்டியினர் வற்புறுத்தியதாவது:-கவர்ன்மெண்டு சம்பந்தப்பட்டமட்டில் இதில் இரண்டு இலாகாக்கள் சிரத்தையுள்ளவையாகவிருக்கின்றன. கனம் டாக்டர் ராஜன் ஒரு இலாகாவின் பொறுப்பை வகிக்கிறார். கனம் கோபால் செட்டி மற்றொரு இலாகாவின் பொறுப்பை வகிக்கிறார். தகராறைப் பற்றிய விஷயமெல்லாம் இரண்டுபேருக்கும் தெரிந்திருக்க வேண்டியது இருவரும் சேர்ந்து பிரஸ்தாப இடத்தைப்பார்த்து வரும்வரை இது சம்பந்தமான ஒரு முடிவான தீர்மானத்தை அவர்கள் ஒத்திப்போட்டார்களானல் நலமாயிருக்கும். தகராறு சம்பந்தமாக தேவஸ்தானத்தின் அபிப்பிராயத்தைகனம்ராஜனிடம் தெரியப்படுத்த அனுமதிக்கப்பட்டிருப்பதால் முனிஸிபாலிடியின் அபிப்பிராயத்தை, இரு மந்திரிகளிடத்தும் தூதுவர் மூலமாகத் தெரியப்படுத்த அனுமதிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. மற்றும் தூதுவகோஷ்டியினர் இது சம்பந்தமாக பல விஷயங்களை வற்புறுத்தி மந்திரிகள் ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

கடைசியாக, ஒரு சமரசத்தைச் செய்து வைக்கவேண்டுமென்றும். அதன்பிரகாரம் தேவஸ்தானத்தின் உடந்தை பாகத்தைப் முனிஸிபாலிட்டி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், ஆனல் வருஷா வருஷம் உத்ஸவம் நடக்காத 345 நாட்கள் அவ்விடத்தை ரஸ்தாப்பாதையின் ஒருபாகமாக முனிஸிபாலிடியார் உபயோகப்படுத்திக்கொள்ள அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், உத்ஸவ தினங்களாகிய 20 நாட்கள் பழைய அளவுக்கு வசந்த தெப்பக் கட்டிடத்தை முனிஸிபாலிடியார் தங்கள் செலவில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும், மேற்படி நிபந்தனைக்கு தேவஸ்தானம் உட்பட வேண்டுமென்றும், தூதுகோஷ்டியினர் வற்புறுத்தினர்.